**ரத்தொட்ட பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரத்தொட்ட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரத்தொட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன்கொடுத்தோராக மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,700,000 ஆன 03 செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படா திருக்கையில் அப்பெறுமதி 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படா திருந்ததுடன் அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு மதல் 2016 ஆம் ஆண் வரையான காலப்பகுதியில் 16 சந்தர்ப்பங்களில் கடன் பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,487,335 தொகை அந்தந்த ஆண்டுகளில் அறவிடப்பட்டிருக்கையில் கடன் பட்டோரின் கீழ் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப் பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையானகாலப்பகுதியில் 17 செயற்திட்டங்களுக்குரிய பிடி காசு ரூபா 551,179 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எழுதுகருவி இருப்புகளின் பெறுமதி ரூபா 292,681 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கைத்தொழில் கடன்பட்டோர் ரூபா 69,100 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட மொத்தம் ரூபா 18,166,207 தொகையான 4 கணக்கு விடயங்களுக்குரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளின் கூட்டுத்தொகை ரூபா 17,101,423 ஆக இருந்தமையால் ரூபா 1,629,878 ஆன வேறுபாடு காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாக | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்குகள்

1997 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருக்கும் ரூபா 15,462 ஆன தொங்கல் கணக்கின் மீதியை சீராக்கம் செய்யாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 கணக்கு விடயங்களுக்குரிய் ரூபா 34,494,921 ஆன மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான கோவைகள், பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்தற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

1.7 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 571(3) | ரூபா 1,046,619 ஆன 24 பொது வைப்புக்களை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்காமல் 2016 ஆம் ஆண்டிலிருந்து பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,952,145 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,240,547 ஆக இருந்தது.

2.2 **வருமான நிர்வாகம்**

**வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் ஓராண்டிற்கு மேற்பட்ட நிலுவையாக இருந்த 354 ஆதனங்களுக்குரிய ரூபா 1,149,267 கூட்டுத் தொகையான வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 35 கடைகளில் இருந்து மாதந்த தவணை 10 இற்கு மேற்பட்ட நிலுவையான கடை வாடகை யின் மொத்தம் ரூபா 1,711,165 தொகை மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 16 ஆந் திகதி சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது தொடர்பாக எழுமாறாக 39 நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அதில் 20 வியாபாரங்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக பரிசோதனைக்கு உட்படுத்திய அந்த 20 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் ரூபா 35,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | நிலுவை தொகையை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபையின் 14 நீர் முன்மொழிகளுக்கு இடையே 4 முன் மொழிவுகள் 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் செயலற்ற நிலைமையில் காணப்பட்டன. 2020 நவம்பர் 18 ஆந் திகதி வரை செயற்பாடற்ற நீர் முன்மொழிவுகளிலிருந்து ரூபா 386,339 ஆன நிலுவை கட்டணமொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 காரணமாக அறவிட முடியாதிருந்ததாக | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1978 ஒக்தோபர் 09 அண்மையில் அமைக்கப்பட்ட வீடமைப்பு முறைமைக்குரிய திட்ட வரைபட திட்டத்திற்கு அமைய மாத்தளை ரத்தொட்ட பிரதான வீதியிலிருந்து கூருவெவ ஓயா (தெலிவள ஓயா) நுழையும் வீதி இடைநடுவே மூடப்பட்டு அத்திட்ட வரைபடத்தின் 37 ஆம் இலக்க வீட்டிற்கு முன்னால் குருவாவ சிறுவர் பூங்காகவின் எல்லையில் அமைந்துள்ள அந்நுழைவு வீதி இடையூறு செய்யப்பட்டு மற்றும் பிரதேச சபைக்கு உரிய காணிப் பகுதியில் தனியார் தரப்பினரால் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | அத்துமீறிய நிர்மாணங் களுக்காக சட்ட ரீதியாக மாற்றிக்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஈ நெசனல நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறவனத்தினால் கணனி மற்றும் உப பாகங்களைப் பெற்று தாபிக்கப்பட்டிருந்த கணனி பயிற்சி நிலையம் 2019 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக சலுகை விலையில் கணனி பயிற்சி பாடநெறிகளை பின்பற்றுவதற்காக கிராமிய மாணவர்களுக்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்ததுடன் இக்கணனிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்பட வேண்டும் |

**3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹுனுகல்வத்த தேவாலயத்தின் அருகில் சனசமூக மண்டபத்தின் கூரையை அமைக்கும் வேலைக்குரிய கொடுப்பனவு பட்டியலின் வேலை விடய இலக்கம் 03 மற்றும் 05 இன் பிரகாரம் கூரை 62x62x6 மில்லி மீற்றர் அளவிலான இரும்பு பேர்லின் இடப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரிந்துரைக்கப்பட்டு 220 மீற்றர் இரும்பு பேர்லினுக்கு ரூபா 600,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பௌதீக பரிசோதனையின் போது கூரைக்காக 50x50x5 மி.மீ. அளவிலான இரும்பு பேர்லின் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆதலால் அதற்காக ரூபா 75,284 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தோடு மதிப்பீட்டு தரத்திற்கு இரும்பு பேர்லின் இடாமை காரணமாக கூயின் உறுதித்தன்மை தொடர்பான சிக்கல் ஏற்படக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கூடுதலான கொடுப்பனவு கணிப்பிடப்பட்டு ஒப்பந்த சங்கத்திடமிருந்து அறவிட்டுக் கொள்வதாக | பரீட்சித்து உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |